# 9

# இயேசு உண்மையில் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தாரா?

*புதிய ஏற்பாட்டின் உபதேசத்தில் இயேசுவானவரின் வாழ்க்கை மற்றும் மரணம் ஆகியவற்றில் ரோமர்களுடைய கையில் அவர் சிலுவையில் அறையப்பட்டு, சரீரப்பிரகாரமாக அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்பதை விட, அதிக சர்ச்சைக்குரியது வேறு எதுவும் இல்லை. ஏனெனில், அது சாதாரண மனிதனின் அனுபவத்திற்கு முற்றிலும் அப்பாற்பட்டதாக உள்ளது; மரணத்தோடு நமக்குள்ளதொடர்புகள், மனிதர்கள் மரித்த பிறகு அதிலிருந்து மீண்டு வருவதில்லை என கூறுகிறது! சில மக்கள் தாங்கள் மரித்ததாகவும் மற்றும் உயிருடன் திரும்பி விட்டதாகவும் உரிமை கோரினார்கள்; ஆனால், அவைகள் அவர்களுடைய உணர்வு சம்பந்தப்பட்ட, ஆய்வு செய்து உறுதிப்படுத்தப்பட முடியாத, இமைப் பொழுது மாத்திரமே இருந்திருக்கும் அனுபவங்களாக இருந்திருக்கின்றன. இந்த மக்கள் உண்மையில் மரித்து, உயிருடன் வந்திருந்தாலும், புதிய ஏற்பாடு இயேசுவைக் குறித்து கூறுவது போல, அவர்கள் நித்தியமாக வாழும்படி எதிர்பார்க்கப்படுவதில்லை. அவர்களுடைய அனுபவங்கள் உண்மையானவைகளாக இருந்தாலும், அவைகள் உண்மையில் இணையானவைகள் அல்ல. எதிரிடையான அர்த்தத்தில், எழுதப்பட்ட பதிவுகளின் அடிப்படையில், இயேசுவின் உயிர்த்தெழுதலைப் பற்றி எழுதியதை விசுவாசிக்கிற சாத்தியக் கூறை பார்க்கிலும், பலர் இப்படிப்பட்ட கதைகளை நம்பவே அதிகம் தயாராக இருக்கின்றனர்.*

*இயேசுவின் உயிர்த்தெழுதல் தொடர்பான கருத்தை சிந்திக்கும்போது, பலருக்கு ஏற்படக்கூடிய முதல் கருத்து “அது சாத்தியமானது அல்ல!” என்பதாக இருக்கிறது. அது இந்த விஷயம் தொடர்பான அவர்கள் சிந்தனையை ஒரு முடிவுக்கு கொண்டு வந்து விடுகிறது, நவீன அறிவியல் அதற்கான ஒரு சாத்தியக்கூறை அறியாமல் இருக்கிறது. இருப்பினும், நாம் ஏதோ ஒன்று குறிப்பாக தெய்வீக தன்மை இடைபடுகிற ஒரு காரியம் சாத்தியமானது அல்ல என்று சொல்லாதபடி எச்சரிக்கையாக இருக்கவேண்டும். உண்மையில், இயேசுவின் உயிர்த்தெழுதல் போன்ற ஒன்றை “நடைபெற சாத்தியமில்லாதது” என கூறுவது, தேவன் ஒருவர் இருக்கிறார் என்பதை நிராகரிப்பதாக இருக்கிறது - சிலர் இவ்விதம் செய்கிறார்கள். தேவன் ஒருவர் இருக்கிறார் என்ற சாத்தியக் கூறை ஒருவர் ஏற்றுக்கொள்கிற வரையிலும் (மற்றும், தத்துவ ரீதியாக பேசும்போது, அதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும், ஏனெனில் அது இல்லை என நிரூபிக்கப்பட முடியாது) அப்படியானால், இயேசுவின் உயிர்த்தெழுதல்*

“சாத்தியம் இல்லாதது” என நாம் கூற முடியாது. நீங்கள் தேவனை விசுவாசித்தால், இயேசுவின் உயிர்த்தெழுதலின் சாத்தியக் கூறை ஏற்றுக்கொள்ள வேண்டும். முன்னதாக நாம் செய்தபடி, அடுத்தபடியாக, நாம் இது *சாத்தியமானதா* என்று கேட்பதைவிட, இது நம்பக்கூடிய தன்மை உள்ளதா என கேட்க வேண்டும். இது வரலாற்றாளரின் பணியாக இருக்கிறது: கடந்தகால நிகழ்ச்சியைப்பற்றி என்ன நிகழ்ந்திருக்கக்கூடும் என்பதை ஆதாரங்களிலிருந்து மீண்டும் கட்டியெழுப்புதல். இயேசுவின் உயிர்த்தெழுதலைப் பற்றியும் நாம் அதைத் தான் கேட்க வேண்டும்: அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்பது எந்த அளவுக்கு சம்பவிக்கக் கூடியதாக இருந்தது?

## இந்த கேள்வி என்ன தாக்கத்தை உடையதாக இருக்கிறது?

இது தொடர்பான விவாத பகுதிக்கு நாம் செல்வதற்கு முன்பாக, “இந்த கேள்வி என்ன தாக்கத்தை உடையதாக இருக்கிறது?” என்று கேட்பதற்கு நாம் சற்று நிற்க வேண்டும். “இதற்கு பதிலளிப்பது நமக்கு எவ்வளவு முக்கியமானதாக இருக்கிறது?” நாம் இயேசுவானவரின் வாழ்க்கை மற்றும் மரணம் ஆகியவற்றை குறித்து விவாதித்து விட்டு, அவருடைய உயிர்த்தெழுதல் தொடர்பான சர்ச்சைக்குறிய பாடத்தை பரிசீலிப்பதை நாம் ஏன் விட்டுவிடக்கூடாது? இயேசுவின் உயிர்த்தெழுதலைப் பற்றி பேசுவதை தவிர்த்து விட்டு, அவர் அல்லது அவள் அது பற்றி என்ன தெரிவு செய்கிறார்களோ அதன்படி சிந்திக்கட்டும் என்று விட்டுவிட்டால், நாம் வரலாற்று ரீதியாகவும் மற்றும் ஆவிக்குரிய ரீதியாகவும் உறுதியான ஒரு நிலையில் இருக்க மாட்டோமா? இவைகள் நல்ல கேள்விகளாக இருக்கின்றன மற்றும் அவைகள் பதில் பெற தகுதியானவைகளாக இருக்கின்றன.

நான் மேல்நிலை பள்ளியில் இருந்த போது, ஒரு முனைவர் கருத்தரங்கில், ஒரு புகழ்பெற்ற ஜெர்மன் இறையியலாளரால் உயிர்த்தெழுதலின் வரலாற்று தன்மை குறித்து எழுதப்பட்ட ஒரு ஆய்வு கட்டுரையை (அதாவது, உயிர்த்தெழுதல் உண்மையில் நடந்ததா அல்லது இல்லையா) வாசிக்கும்படி கோரப்பட்டேன். எழுத்தாளர் முப்பது பக்கங்களுக்கும் மேலாக இந்த முக்கியமான கேள்வி தொடர்பான சாதக மற்றும் பாதக அம்சங்கள் பற்றி விவாதிக்க பயன்படுத்தினார்; அதன்பிறகு தனது இறுதி ஆய்வில், உண்மையில் இயேசு உயிர்த்தெழுந்தாரா இல்லையா என்பது ஒரு காரியமல்ல என்ற ஒரு முடிவை எட்டியிருந்தார். ஈஸ்டர் காலையில், விசுவாசி, அந்த சம்பவம் நடந்திருந்தாலும் அல்லது இல்லையென்றாலும் “தன் இருதயத்தில் உயிர்த்தெழுதல் பிரகாசத்தை கொண்டிருக்க முடியும்,” அதுவே முக்கியமானது என கூறியிருந்தார். நான் அதிர்ச்சி அடைந்தேன்! வரலாற்று ரீதியாக சிந்திக்க *முயற்சிக்கிற* ஒருவர் எப்படி இயேசுவின் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தது போன்ற ஒரு காரியத்தை முக்கியமானது அல்ல என்று சொல்லக் கூடும்? இந்த சிந்தனையாளர் செல்லுபடியாகக்கூடிய ஒரு வரலாற்று ஆய்வு நிலையிலிருந்து, தன் உணர்வு சார்ந்த ஒரு மத அனுபவத்திற்கு எப்படி திடீரென மாறினார்?

மறுபடியுமாக, நீல் ஆர்ம்ஸ்ராங்கின் நிலவு பயணத்தை பற்றி சிந்தியுங்கள். ஒன்றேல், அவர் நிலவில் நடந்தார், அல்லது அவர் நடக்கவில்லை. நமது

*கற்பனைகளில், "நிலவு பயண பிரகாசம்" உடையவர்களாக இருக்கிறோமா அல்லது இல்லையா என்பது ஒரு காரியம் அல்ல என்று நாம் கூற இயலாது. இயேசுவானவரின் உயிர்த்தெழுதலின் காரியத்திலும் இது உண்மையாயிருக்கிறது: ஒன்றேல், அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் அல்லது அவர் உயிர்த்தெழவில்லை. அது உயிர்த்தெழுதலை வரலாற்று ரீதியாக பார்க்கிற ஒரு காரியமாக மாற்றுகிறது, விசேஷமாக அநேக ஆதாரங்கள் அவர் உயிர்த்தெழுந்தார் என்று கூறுவதால்தான். ஏனெனில், அவர் உயிர்த்தெழுதலை "நிரூபிக்க" முடியும் அல்லது "நிரூபிக்க முடியாது" என்பதை பற்றியது அல்ல, ஆனால் இது சம்பவிக்கக் கூடியதாயிருந்ததா என்பதை பற்றி நாம் நிச்சயமாக விவாதிக்கலாம். "அது ஒரு காரியம் அல்ல" என்று வெறுமெனே கூறுவது திருப்திகரமான பதில் அல்ல. இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்திருந்தால், மனித வரலாற்றின் மிக முக்கியமான ஒரு தருணத்தை சம்மந்தமில்லாதது என நிராகரிக்கிறவர்களாக இருப்போம். நேர்மையான அறிவு நெறி நாம் அதை செய்வதை தடுக்கிறது. நாம் ஏன் அதை செய்ய விரும்ப வேண்டும்? அவிசுவாசிகள் இப்படிப்பட்ட ஒரு விநோதமான கதை தவறு என்று நிரூபிப்பதை வரவேற்க வேண்டும்! விசுவாசிகள் இயேசுவானவரின் உயிர்த்தெழுதல், ஒரு மாபெரும் சத்தியம் என உறுதிப்படுத்தும் வாய்ப்பை வரவேற்க வேண்டும்!*

*புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர்கள், அவர்கள் வெளிப்படுத்தியுள்ள விளக்கங்கள் சுட்டிக் காட்டுவதால், இந்த கேள்வியின் தாக்கத்தை முழுமையாக அறிந்திருத்தார்கள். கிறிஸ்தவ விசுவாசத்திற்கு உயிர்த்தெழுதல் என்பது அடிப்படையான கருத்தாக இருந்தது என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். பவுல் உயிர்த்தெழுதலை விட்டுவிடுவது, கிறிஸ்தவ விசுவாசத்தை முற்றிலும் செல்லாததாக மாற்றிவிடுகிறது என கூறும் அளவுக்கு சென்றார்! 1 கொரிந்தியர் 15:3-5 இல், அவர் இயேசுவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் மற்றும் உயிர்த்தெழுதலுக்கு பிந்திய தரிசனங்களை "மிகவும் முக்கியமானவைகள்" என பட்டியலிட்டு, அதை தாம் கொரிந்தியர்களுக்கு பிரசங்கித்திருந்ததாகவும் குறிப்பிட்டார். பிறகு, பின்வருமாறு அவர் கூறினார்,*

> *கிறிஸ்து எழுந்திருக்கவில்லை என்றால், எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா. மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், தேவன் எழுப்பாத கிறிஸ்துவை அவர் எழுப்பினாரென்று நாங்கள் தேவனைக் குறித்துச் சாட்சிசொன்னதினாலே, தேவனுக்காகப் பொய்சாட்சி சொல்லுகிறவர்களாகவும் காணப்படுவோமே. மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லை. கிறிஸ்து எழுந்திராவிட்டால், உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும்; நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள். கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களும் கெட்டிருப்பார்களே (1 கொரிந்தியர் 15:14-18).*

*பவுல் தாம் போதித்தவைகளின் கருத்திலிருந்து விலகி செல்லவில்லை. அவர் எந்த தயக்கமும் இல்லாமல், சுவிசேஷம் - கிறிஸ்து நமது பாவங்களுக்காக பலியான இரட்சிப்பின் செய்தி என்பது - உயிர்த்தெழுதலின் யதார்த்தத்தின் பேரில் நிற்கிறது அல்லது விழுகிறது என்று கூறினார்.*

"உயிர்த்தெழுதல் - இல்லாத" கிறிஸ்தவம் ஏன் இருக்க முடியாது? அது இன்னும் இயேசுவை கனம்பண்ணும் மற்றும் வாழ்வதற்கான நல்ல வழியை போதிக்கும் - ஆனால் பவுலின் கூற்றுபடி இவைகள் நமது பிரதானமான கரிசனைகள் அல்ல. ரோமர் 1:1-4, அவர் போதித்த சுவிசேஷத்தின் குறிப்பிடத்தக்க ஒரு சுறுக்கத்தை கொடுத்தார்.

> தம்முடைய சுவிசேஷத்தைப் பற்றி வாக்குத்தத்தம் பண்ணினபடி, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவானவர் மாம்சத்தின்படி தாவீதின் சந்ததியில் பிறந்தவரும், பரிசுத்தமுள்ள ஆவியின்படி தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் நிரூபிக்கப்பட்ட தேவகுமாரனுமாயிருக்கிறார்.

"... உயிர்த்தெழுதலினால் - தேவ குமாரனென்று பலமாய் *நிரூபிக்கப்பட்டார்*" என்று இயேசுவைக் குறித்து பவுல் கூறிய போது, அவர் என்ன பொருளில் அதை கூறினார் (வலியுறுத்தல் என்னுடையது)? சிலர், இயேசு மரித்தோரிலிருந்து எழுந்தபோது, அவர் தேவனுடைய குமாரனாக ஆனார் என்று புரிந்து கொண்டிருந்தார்கள். பவுலுடைய கருத்து அது அல்ல. உயிர்த்தெழுதல் இயேசுவை தேவனுடைய குமரானாக "ஆக்க" வில்லை. பவுலின் கருத்துப்படி, "அவரை தேவனுடைய குமாரனாக காண்பித்தது." இயேசு தம்மை யார் என்று உரிமை கோரினாரோ, அதற்கு இது ஒரு பலமான நிரூபித்தலாயிருந்தது. பவுல் இதை தனிப்பட்ட முறையில் அறிந்திருந்தார், ஏனெனில் மரித்தோரிலிருந்து எழுந்த இயேசுவை அவர் பார்த்திருந்தது, பவுல் முன்பு நம்பினது போல, அவர் ஒரு ஏமாற்றுக்காரர் அல்ல,மாறாக அவர் உண்மையிலேயே இஸ்ரவேலின் மேசியா என அவரை உணரும்படி செய்தது (நடபடிகள் 9:1-5; 1 கொரிந்தியர் 9:1).

இயேசுவின் உயிர்த்தெழுதலை இவ்விதமாய் அறிந்து கொண்டது பவுல் ஒருவர் மட்டும் அல்ல. நடபடிகள் 2:14-36, "முதல் கிறிஸ்தவ பிரசங்கம்" என்று அழைக்கப்படக் கூடியதை உள்ளடக்கியிருக்கிறது. அவர் சிலுவையில் அடிக்கப்படுதல் மற்றும் உயிர்த்தெழுதலுக்குப் பின்பு, இயேசுவின் அடையாளக் குறிப்புகள் அறிவிக்கப்பட்டது இதுவே முதல் முறையாக இருந்தது. பேதுரு தான் செய்தியாளர். பெந்தெகொஸ்தே நாளில் எருசலேமில் கூடியிருந்த யூதர் கூட்டத்தாரால் காணப்பட்ட சாட்சி (2:1-13) யோவேல் 2:28 இன் மேசியா பற்றிய தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாயிருந்தது என்று அறிவித்துவிட்டு, அவர் இயேசு பற்றி விவாதிக்க துவங்கினார் (நடபடிகள் 2:22). பேதுரு எவ்வளவு விரைவாக, இயேசுவின் வாழ்க்கை சம்பவங்கள் மற்றும் மரணம் ஆகியவற்றிலிருந்து (2:23, 24) நகர்ந்து, அவருடைய உயிர்த்தெழுதலுக்கு சென்றார் என்பதை கவனியுங்கள், தெளிவாக அது அவருடைய பிரசங்கத்தின் மைய பகுதியாக இருந்தது. அவர் சங்கீதம் 16இல் இருக்கிற ஒரு தீர்க்கதரிசன பகுதியை அடிப்படையாக கொண்டு, யாரோ ஒருவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழ வேண்டியிருந்தது என்று விவாதித்தார்: "என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர், உம்முடைய பரிசுத்தர் அழிவை காணவொட்டீர்" (2:27). பின்னர், தாவீது மரித்து அடக்கப்பண்ணப்பட்டிருந்ததை யாவரும் அறிந்திருந்தபடியால், அவர் தம்மை குறித்து பேசியிருந்திருக்க முடியாது

என்பதை அவர் வலியுறுத்தினார். அவருடைய கல்லறை இருந்த இடம் இன்னமும் மக்களால் அறியப்பட்டிருந்தது. மேலும், அவர் தாவீது தம்மை குறித்து பேசவில்லை, மாறாக, "கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை (மேசியா)" குறித்துப் பேசினார் என்று கூறினார் (2:31). பின்னர் அவர், "ஆகையினால், நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள்" என்று கூறி முடித்தார் (2:36). உயிர்த்தெழுதல் இயேசுவை ஆண்டவர் மற்றும் கிறிஸ்து (மேசியா) என்று அடையாளப்படுத்தியது. இது இல்லாவிட்டால், தம்மை மேசியா என்று கூறிய இன்னொரு மாயக்காரரில் ஒருவராக இருந்திருப்பார்.

கிறிஸ்தவ விசுவாசத்தின் நம்பகத்தன்மை இயேசு உயிர்த்தெழுந்தாரா அல்லது இல்லையா என்பதின் அடிப்படையில் அமைந்துள்ளது. இன்று கிறிஸ்தவத்தை பின்பற்றுவதாக கூறுகிறவர்கள் சுவிசேஷத்தின் இந்த பகுதியை புரிந்து கொள்ள தவறிவிடுகிறார்கள் என்பது வியப்புக்குரியதாயிருக்கிறது.

## ஆதாரம் எங்கே?

இப்போது இயேசுவானவரின் உயிர்த்தெழுதல் தொடர்பான விவாதத்தில் தெளிவான ஒரு பார்வை இருக்கிறது. இப்போது நாம் இது சம்பவிக்கக் கூடியதாயிருந்ததா என்ற கேள்விக்கு செல்வோம். இயேசு உயிர்த்தெழுந்தார் என்பதை ஆலோசிக்கிற எந்த ஆதாரமாவது இருக்கிறதா?[1]

**பண்டைய மூலங்கள்**

புதிய ஏற்பாட்டின் எழுத்துக்கள் தாமே இந்த பாடத்திற்கான சாட்சிகளின் ஆரம்பகால மூலங்களாக இருக்கின்றன. இதில் குறிப்படத்தக்க அம்சம் என்னவென்றால், ஆரம்பகால எழுத்துக்கள் யாவும் ஒரே காரியத்தை கூறுகின்றன: இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார். எல்லா நான்கு சுவிசேஷங்களும் இயேசு உயிர்த்தெழுந்தார் என்று கூறுகின்றன. நடபடிகள் புத்தகத்தில் பதியப்பட்டுள்ள அப்போஸ்தலர்களின் ஆரம்பகால பிரசங்கம், பவுலின் எழுத்துக்களை போல, அதே காரியத்தை உரிமைகோருகின்றன (1 கொரிந்தியர் 15; ரோமர் 1:1-5) பவுலின் வாக்கியங்கள் சிறப்பான முக்கியத்துவம் வாய்ந்தவைகளாக உள்ளன, ஏனெனில், சுவிசேஷங்கள் எழுதப்படுவதற்கு, இருபதிலிருந்து இருபத்தி ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டன (பெரும்பாலான மதிப்பீடுகளின்படி) அது கி.பி. 50களின் மத்தியில், கிறிஸ்து உயிர்த்தெழாவிட்டால் கிறிஸ்தவ விசுவாசம் வீணாயிருக்கும் என பவுல் எழுதின காலமாயிருந்தது (காணவும் 1 கொரிந்தியர் 15). இன்னும் சற்று முன்னதாக, கி.பி. 51-52-ல், 1 தெசலோனிக்கேயர் 4:14ல்: "இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோமே; அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடேகூடக் கொண்டுவருவார்" என எழுதினார். சிலர் "உயிர்த்தெழுதல் கதை" நான்கு சுவிசேஷங்களும் எழுதப்பட்ட காலத்தில், ஆரம்பகால சபையில், அதாவது உண்மைசம்பவம் நிகழ்ந்ததிலிருந்து நாற்பது அல்லது அதற்கும் கூடுதலான ஆண்டுகளுக்கு முன்னரே உருவாகியிருந்ததாக விவாதிக்கிறார்கள். இது அப்படிப்பட்ட ஒரு கட்டுக்கதை உருவாக்கப்படுவதற்கும் மற்றும் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கும்

மிகவும் குறுகிய காலமாயிருக்கிறது - ஆனால் பவுல் இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் நடந்து *இருபது ஆண்டுகள்* கழித்தே எழுதினார். எருசலேமில் அந்த பஸ்கா - பண்டிகையின் காலத்தில், நடந்த உண்மை நிகழ்வுகளை கண்ட சாட்சிகள் இன்னமும் உயிரோடு இருந்திருப்பார்கள்; இயேசு உயிர்த்தெழாமல் இருந்திருந்தால், அவருடைய மரித்த உடல் உயிர்த்தெழுதலுக்கு பின்னரும் காணப்பட்டிருந்தால், அவர்கள் அதற்கு எதிராக தர்க்கம் செய்திருப்பார்கள். பவுல் உயிர்த்தெழுதலுக்கு பிந்திய தரிசனங்களை குறித்து கூறும்போது, "அதன் பின்பு அவர் ஐந்நூறு பேருக்கு அதிகமான சகோதரருக்கும் ஒரே வேளையில் தரிசனமானார்; அவர்களில் அநேகர் இந்நாள் வரைக்கும் இருக்கிறார்கள், சிலர் மாத்திரம் நித்திரையடைந்தார்கள்" என்று எழுதினார் (1 கொரிந்தியர் 15:6). "கண்கண்ட சாட்சிகள் இன்னமும் இருக்கிறார்கள்; நீங்கள் அவர்களிடத்தில் போய் கேட்டுப் பாருங்கள்!" என்று பவுல் கூறுவது போல இருக்கிறது, பவுல் தான் எழுதினது உண்மையானது அல்ல என்பதை அறிந்திருந்தால், இது ஒரு மிகவும் துணிச்சலான உரிமை கோருதலாக இருந்திருக்கும்.

எல்லா பழமையான மூலங்களும் இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்று கூறுகின்றன. அவர் உயிர்த்தெழவில்லை என எதுவும் கூறுவதில்லை. உயிர்த்தெழுதல் - இல்லாத கிறிஸ்தவத்தை உடையதாகயிருப்பது ஏற்புடையதாயிருந்திருந்தால், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் அதை பிரதிபலித்திருப்பார்கள்?[2]

### இயேசுவின் அடக்கம்

இயேசு சிலுவையில் அறையப்பட்ட பின்பு, அடக்கம் செய்யப்பட்டார் என்ற உண்மை நமக்கு முக்கியமானதாக தோன்றாதிருக்கலாம், ஆனால் அது புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களுக்கு முக்கியமானதாக இருந்தது. எல்லா நான்கு சுவிசேஷங்களும் இயேசுவின் அடக்கத்தை குறிப்பிடுகின்றன (மத்தேயு 27:57-61; மாற்கு 15:42-47; லூக்கா 23:50-56; யோவான் 19:38-42). இந்த பதிவுகள் யாவும் பழமையான மூலங்களிலிருந்து அவைகளைப் பற்றி நாம் தீர்மானிக்கிற வகையில், யூத அடக்க முறைகளுக்கு ஒத்திருக்கின்றன. உடல்கள் சாதாரணமாக, தண்ணீரால் கழுவப்பட்டு, வாசனை திரவியங்கள் பூசப்பட்டு (மரியாதையின் அதே அளவுக்கு துர்வாடையை கட்டுப்படுத்துவதற்கு) மற்றும் பிரேத சீலைகளினால் சுற்றப்பட்டு, அடக்கத்திற்கு ஆயுத்தம் செய்யப்பட்டன. மாற்கு 16:1 மற்றும் லூக்கா 24:1 ஆகியவை ஞாயிற்றுகிழமை காலை கல்லறைக்கு சென்ற பெண்கள், இயேசுவின் உடலுக்கு வாசனை திரவியங்கள் இட சென்றார்கள் என கூறுகின்றன. ஓய்வுநாள் நெருங்கி வந்து கொண்டிருந்தபடியால், இயேசு அவசரமாக அடக்கம் செய்யப்பட்டார் என்பதை நினைவில் வையுங்கள், ஆகவே "முறையான" அடக்கத்திற்கு அங்கே நேரம் இருக்க வில்லை (யோவான் 19:41, 42). குகைகளில் குடையப்பட்ட கல்லறைகள் அடக்கம் செய்யும் இடங்களாக பயன்படுத்தப்பட்டன, அப்படிப்பட்ட கல்லறைகள் பாலஸ்தீனத்தில் இயேசுவின் காலம் முதல் இன்று வரை இருக்கின்றன. சுவிசேஷங்கள் இயேசுவின் அடக்கத்தை கூறுவதில் ஒன்றுக்கொன்று இணையாக இருக்கின்றன, மற்றும் அவர்கள் கூறுபவைகள் நமக்கு தெரிந்த பிற மூலங்களில் இருந்து நாம் அறிந்தவைகளோடு ஒத்துப்போகின்றன.

சுவிசேஷங்கள் எந்த அளவுக்கு தகவல்களை தருகின்றனவோ அதே

அளவுக்கு பிற மூலங்களின் தகவல்களை உடையவர்களாக இருக்கிறோம் என்ற உண்மை, இந்த எழுத்தாளர்களுக்கு இயேசுவானவரின் சம்பவத்தின் இந்த பகுதி முக்கியமானதாக இருந்திருக்கிறது என்பதை காண்பிக்கிறது. பவுல், இயேசுவானவர் "அடக்கம் பண்ணப்பட்டார்" என்ற சத்தியத்தை தாம் பிரசங்கித்த சுவிசேஷ செய்தியில் "பிரதானமானது" என பட்டியலிட்டுள்ளார் (1 கொரிந்தியர் 15:4). இயேசுவின் அடக்கம் ஏன் அவ்வளவு முக்கியமானதாக இருக்கிறது மற்றும் அது எந்த விதத்தில் உயிர்த்தெழுதலுக்கு ஆதாரமாக இருக்கிறது?

இதின் முக்கியத்துவம் காண்பதற்கு கடினமானது அல்ல. இயேசுவின் அடக்கம், அவருடைய மரணத்தை நம்பத்தகுந்ததாக்குகிறது மற்றும் அவருடைய உயிர்த்தெழுதலுக்கு அவசியமான முன் செயலாக அமைகிறது. இயேசு சரீரத்தில் மரித்திருந்தார் என்பது புதிய ஏற்பாடு அவருடைய "உயிர்த்தெழுதல்" பற்றி கூறுவதை நாம் புரிந்து கொள்ள உதவி செய்கிறது. வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், அடிக்கடி சொல்லப்படுவது போல, அது ஒரு சாதாரண "ஆவிக்குரிய" உயிர்த்தெழுதல் (அதின் பொருள் என்னவாயிருப்பினும்) மட்டுமல்ல, அவருடைய முந்தைய மரித்த உடலில் உயிர்த்தெழுதலுமாய் இருக்கிறது. பண்டைய எழுத்தாளர்கள் உயிர்த்தெழுதல் தொடர்பாக எழுப்பப்பட்ட ஆட்சேபனைகளுக்கு முன் கூட்டியே பதிலளிக்க முயற்சித்தது போன்று இருக்கிறது: அவர் உண்மையில் மரிக்கவில்லை, மயக்கமடைந்து மட்டும் போயிருந்தார் மற்றும் பின்னர் கல்லறையில் விழித்தெழுந்தார் - அல்லது அவர் அவருடைய பின்பற்றாளர்களின் இருதயங்களில் "மீண்டும் உயிரோடு வந்தார்" ஆனால் சரீரபிரகாரமாக "உயிர்த்தெழுவில்லை." சுவிசேஷங்கள் இயேசு முழுமையாக, சரீரபிரகாரமாக மரித்தார் என்பதை நாம் அறிந்து கொள்ள விரும்புகிறது. அங்கே ஒரு மருத்துவர் இருந்திருப்பாரேயானால், நவீன மருத்துவ ஆய்வுக்குறிய எல்லா கருவிகளுடனும், அவர் இயேசு மரித்திருந்தார் என்பதை அதிகாரப்பூர்வமாக அறிவித்திருந்திருப்பார்; அவர் நாடித்துடிப்பை கண்டு பிடித்திருக்க மாட்டார், மூளை நரம்பில் இயக்கம் இல்லை, சுவாசித்தலும் இல்லை. இயேசு மரித்திருந்தபடியால், அவர் அடக்கம் பண்ணப்பட்டிருந்தார். இது அவர் உயிர்த்தெழுதலுக்கான வாய்ப்பை உருவாக்குகிறது.

இயேசு அடக்கப்பண்ணப்பட்டிருந்ததால், அவருடைய சரீரத்திற்கு ஏதாவது சம்பவிக்க வேண்டியிருந்தது. இறந்த உடல் அந்த கல்லறையிலேயே இருந்திருந்தால், அதை வெளியே கொண்டு வந்து காண்பிப்பது யூத அதிகாரிகள் - அல்லது - பிலாத்து ஆகியோருக்கு எவ்வளவு சுலபமானதாக இருந்திருக்கும்! இந்த விதத்தில், அவர்கள் புதிய கிறிஸ்தவ இயக்கம் உருவாவதற்கு முன்பே அதை அழித்துப் போட்டிருக்கக் கூடும்! ஆச்சரியப்படும் விதத்தில், அவர்கள் அதை செய்யவில்லை - அவர்களால் அதை செய்ய இயலவில்லை.

### காலியான கல்லறை

இயேசுவின் சிநேகிதர் மற்றும் எதிரிகள் ஆகிய இருவரும் ஒன்று போல கல்லறை காலியாக இருந்தது என்பதை அங்கீகரிக்கிறார்கள். பெண்கள் ஞாயிறு காலை கல்லறையிடம் சென்ற போது, அவர்கள் அது காலியாயிருந்ததை கண்டுபிடித்தார்கள். இது ஏதோ ஒரு விதத்தில் விளக்கப்பட வேண்டும். அவர்கள் தவறாக இதுவரை பயன்படுத்தப்படாத ஒரு கல்லறைக்கு சென்றார்களா?

அப்படி நடக்கவில்லை, மாற்கு 15:47 இயேசுவின் அடக்கம் தொடர்பாக: "அவரை வைத்த இடத்தை மகதலேனா மரியாளும் யோசேயின் தாயாகிய மரியாளும் பார்த்தார்கள்" என்று கூடுதல் தகவல் தருகிறது. லூக்கா 23:55, கலிலேயாவிலிருந்து "அவருடனே கூடவந்திருந்த ஸ்திரீகளும் பின் சென்று கல்லறையையும் அவருடைய சரீரம் வைக்கப்பட்ட விதத்தையும் பார்த்து, ..." என்று கூறுகிறது. மாற்கு மற்றும் லூக்கா ஆகிய இருவரும் ஸ்திரீகள் அதி காலை மங்கலில் பாதை தவறி, ஒரு தவறான கல்லறைக்கு சென்றார்கள் என்ற யூகத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கிறார்கள்.

இயேசுவின் கல்லறை காலியாக இருந்ததற்கு ஏதாவது ஒரு விளக்கம் அளிக்கப்பட வேண்டும். அப்படிச் செய்வது தர்க்கரீதியாக சரியாக இருக்கும் அல்லவா? அதிகாரிகள் ஆர்லிங்டன் தேசிய கல்லறையிலுள்ள ஜான் எப். கென்னடி அவர்களின் கல்லறை உண்மையில் காலியாயிருக்கக் கண்டால், அவருடைய சரீரம் எங்கே இருக்கிறது என்பது பற்றிய விசாரணைகள் இருக்காது என்று நீங்கள் யூகிக்கிறீர்களா? அதற்கு என்ன நடந்தது என்பதை விளக்குவதற்கு எல்லா சாத்தியக்கூறுகளும் ஆராயப்படும், அது எங்கோ ஒரு இடத்தில் இருக்க வேண்டும். இயேசுவின் சரீரத்தைப் பற்றிய விஷயத்திலும் இது வேறுபடுவதில்லை. அது கல்லறையில் இருக்கவில்லையானால், பின்னர் அது எங்கே இருந்தது?

உயிர்த்தெழுதல் என்ற கருத்தை எதிர்ப்பதில், சிலர், அப்போஸ்தலர்கள் உயிர்த்தெழுதல் தொடர்பான பிரசங்கத்தில் கல்லறை காலியாக இருந்ததை வலியுறுத்தவில்லை என்று சுட்டிக்காட்டுகின்றனர். இது பண்டைய கால உண்மைக்குப்பதிலாக நவீன கண்டுபிடிப்பாக இருக்கிறது என்று அவர்கள் அர்த்தம் கொள்கிறார்கள். ஆகவே இது ஒரு சரியான வாதம் அல்ல. இருப்பினும், பேதுருவின் பெந்தெகொஸ்தே நாள் பிரசங்கத்தை பரிசீலியுங்கள் (நடபடிகள் 2:22-36) பேதுரு சங்கீதம் 16ஐ அடிப்படையாக கொண்டு தேவனுடைய "பரிசுத்தவான்" அழிவை காணமாட்டார் அல்லது அவருடைய சரீரம் அழியாது என்று அறிவித்தபோது, "சகோதரரே, கோத்திரத் தலைவனாகிய தாவீதைக் குறித்து நான் உங்களுடனே தைரியமாய் பேசுவதற்கு இடங்கொடுங்கள், அவன் மரணம் அடைந்து அடக்கம் பண்ணப்பட்டான்; அவனுடைய கல்லறை இந்நாள் வரைக்கும் நம்மிடத்திலிருக்கிறது" என்று கூற தயங்கவில்லை (நடபடிகள் 2:29). பேதுரு, இயேசுவின் காலியான கல்லறையைக் குறித்து குறிப்பாக குறிப்பிடாத நிலையில், அதின் விளைவு மிகவும் தெளிவாகவுள்ளது: இயேசுவின் கல்லறை காலியாகவுள்ளது; தாவீதின் கல்லறை அப்படி இல்லை. அல்லாமலும், அப்போஸ்தலர்கள் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவுக்கு காட்சிகளாயிருக்கிறார்கள். இயல்பாக, சாட்சியங்களின் வரிசையில் காலியான கல்லறை இரண்டாவதாக வரும்.

கல்லறை காலியாயிருந்ததின் நிஜத்தன்மை மற்றும் அதின் முக்கியத்துவத்தை நிராகரிக்க கவர்ச்சிகரமானது முதல் கோமாளித்தனமானது வரை பல முயற்சிகள் எடுக்கப்பட்டன, ஆனால் இவைகளில் எதுவுமே, குறைகூறும் ஆராய்சியாளர்கள் உட்பட, பெரிய அளவில் பின்பற்றுபவர்களை ஒருபோதும் வென்றிருந்ததில்லை. இயேசு உயிர்த்தெழுந்து விட்டார் என்ற ஒரு இட்டுக்கட்டப்பட்ட கதையை தவிர்ப்பதற்கு இயேசுவின் விரோதிகள் அவருடைய சரீரத்தை திருடினார்கள் என்ற உரிமை கோரல் அறிவுக்கு பொருத்தமானதாக இல்லை: அவர்களுடைய

கடைசி ஆசை அந்தக் கல்லறை சரீரம் இல்லாத ஒன்றாக இருந்திருக்க வேண்டும் என்பதாக இருந்திருக்கும். இயேசு உயிர்த்தெழுந்து விட்டார் என்பது போல காண்பிப்பதற்கு, அவருடைய சொந்த சீஷர்களே அவருடைய சரீரத்தை திருடினார்கள் என்ற ஒரு கருத்து, சம அளவில் பொருந்தாததாகவுள்ளது, ஏனெனில், அவர்கள் அவர்களுடைய அந்த உரிமை கோரலுக்காகவே இறுதியில் மரித்தனர். "மயக்க - கொள்கை" போன்றவைகள் (அதாவது இயேசு உண்மையில் மரித்திருக்கவில்லை, மற்றும் கல்லறையின் குளிர்ச்சியில் அவர் உயிர்ப்படைந்தார், பின்பு தாமாகவே வெளியே வந்தார்) எவருடைய கவனத்யையும் பெறுவதில்லை மற்றும் அவைகள் எந்த முக்கியத்துவத்தையும் பெறுவதில்லை.

சமீபத்தில், இயேசு கருத்தரங்கத்தை சேர்ந்த ஜான் டொமினிக் குரோசன் என்பவர், இயேசுவின் உடல் அடக்கம் பண்ணப்படவே இல்லை என்ற வித்தியாசமான ஒரு அணுகுமுறையை மேற்கொண்டுள்ளார். முழுக்க முழுக்க ஊகத்தில் இயங்கும் குரோசன் இயேசுவின் விரோதிகள் அவருடைய உடலுக்கு ஒரு கண்ணியமான அடக்கத்தை கொடுத்திருக்க மாட்டார்கள், மற்றும் அவருடைய சிநேககிதர்களும் அப்படி செய்ய அனுமதிக்கப்பட்டிருக்க மாட்டார்கள், அவருடைய சரீரம் அவருக்கு தண்டனை நிறைவேற்றியவர்களால் ஒரு காலியான கல்லரையில் தூக்கி வீசப்பட்டது மற்றும் பின்னர் அது நாய்களால் உண்ணப்பட்டது என்று கூறுகிறான்.[3] அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு, சனகரின் சங்கத்தின் ஒரு கனம் பொருந்திய உறுப்பினர், அவர் பிலாத்துவிடம் இயேசுவின் உடலை கேட்டுப் பெற்று அடக்கம் செய்தார் என சுவிசேஷ பதிவுகள் உரிமை கோருகின்றன. ஆனால் குரோசன் (எந்த வித வரலாற்று ஆதாரமும் இல்லாமல்) அது அப்படி நடக்கவில்லை என கூறுகிறார். அவர், "அவர்களுக்கு அதிகாரம் இருந்திருந்தால், அவர்கள் அவருடைய சிநேகிதராக இருக்க வில்லை; அவர்கள் அவருடைய சிநேகிதராக இருந்திருந்தால், அவர்களுக்கு அதிகாரம் இருக்கவில்லை" என கூறினார்.[4] மூலங்களிலிருந்து ஆதரவான ஆதாரங்கள் இல்லாமல் உரிமைகோருவது ஒரு நல்ல வரலாற்று ஆய்வுமுறை அல்ல. இயேசுவின் உடல் ஒருபோதும் அடக்கம் செய்யப்பட வில்லை என்ற அவருடைய கூற்று அதின் நிலையிலேயே பார்க்கப்பட வேண்டும்: கல்லறை காலியாயிருப்பதற்கான காரணத்தை விளக்க வேண்டியதை தவிர்ப்பதற்கு எடுத்துக் கொண்ட ஒரு பரிதாப முயற்சி.

**உயிர்த்தெழுதல் அறிக்கைகள்**

உயிர்த்தெழுதல் எவ்விதமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது என்பது இன்னொரு பரிசீலனையாக இருக்கிறது. உயிர்த்தெழுதலுக்கெதிரான வழக்கமான நுணுக்கமான தர்க்கங்களில் ஒன்று, அது புதிய மதத்திற்கு நம்பகத்தன்மை கொடுப்பதற்கான ஆரம்பகால சபையின் (சிலர் பவுல் அதை கண்டுபிடித்தார் என கூறுகிறார்கள்) கண்டுபிடிப்பு என்பதாகும். அதின் கருத்து என்னவெனில், இயேசு தம்மை மேசியாவாக அல்லது தேவனுடைய குமாரனாக உரிமை கோரவில்லை, அல்லது அவர் அற்புதங்களை செய்யவோ அல்லது மரித்ததிலிருந்து உயிரோடு எழும்பவோ இல்லை என்பதாகும். சாராம்சத்தில், சுவிசேஷங்களின் எழுத்தாளர்கள், இயேசு உயிர்த்தெழுந்தார் மற்றும் இன்னமும் உயிரோடிருக்கிறார் என்ற ஒரு கதையை (அல்லது ஒவ்வொரு விரிவான தகவலிலும் ஒத்துப் போகாததால், நான்கு தனிப்பட்டவைகள்) உருவாக்கினார்கள்

என்பது தர்க்கமாக இருக்கிறது. இவைகள் ஒரு திறனாய்வாளருக்கு ஆரம்பத்தில் சரியாக தோன்றலாம். ஆனால் அப்படிப்பட்ட யோசனையில், மோசமான குறைகள் இருக்கின்றன.

மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் ஆகியோர் உயிர்த்தெழுதலின் கதையை கண்டு பிடித்திருப்பார்களானால், அவர்கள் ஏன் அந்த சம்பவத்தை உண்மையில் *பார்த்தவர்களில்* எவரையும் பதிவு செய்ய வில்லை? நான்கு சுவிசேஷபதிவுகளும் இயேசு மரித்தார் மற்றும் அடக்கம் பண்ணப்பட்டார், ஆனால் ஸ்திரீகள் கல்லறை காலியாக இருப்பதை ஞாயிற்றுக்கிழமை கண்டுபிடித்தார்கள் என கூறுகின்றன. இயேசு கல்லறையிலிருந்து வெளியே வந்ததற்கான சாட்சிகள் இருக்கவில்லை - காலியான கல்லறை மற்றும் பின்பு உயிர்த்தெழுந்த கிறிஸ்து மட்டுமே இருந்தார். (மத்தேயு 28:11 கல்லறையை காவல் காத்த சேவகர் இயேசு வெளியே வந்ததை பார்த்தார்கள் என்று ஆலோசிக்கிறது, ஆனால் "நடந்த யாவற்றையும்" என்பதில் இதுவும் உள் அடங்கியிருந்ததா என்பது தெளிவாக இல்லை.) இப்போது, இது ஒரு கட்டுக் கதையை கண்டுபிடிக்கும் விநோதமான மற்றும் நம்பவைக்க முடியாத வழியாக இருக்கிறது. இந்த கதை இயற்றப்பட்டிருக்குமானால், நிச்சயமாக நான்கு சுவிசேஷகர்களும் (சுவிசேஷ எழுத்தாளர்கள் அடிக்கடி அழைக்கப்படுகிறபடி) நம்பத்தகுந்த சாட்சிகளை கொடுத்திருப்பார்கள். யூதரின் பிரதான ஆசாரியர் அல்லது பிலாத்து கூட இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்திருந்தார் என்பதை சரிபார்ப்பதற்கு அங்கே இருந்திருப்பார். இந்த நான்கு எழுத்தாளர்களும் சாட்சிகளின் பட்டியலை நீட்டிச் செல்வதற்கு முயற்சி செய்யாமலிருந்தது, அவர்கள் உண்மையுள்ளவர்கள் என்பதற்கு சான்றாயிருக்கிறது. பிற சொற்களில் கூறுவதானால், அவர்கள் உண்மையில் அறிந்திருந்ததை விட, கூடுதலாக சொல்வதற்கு அவர்கள் முயற்சிக்க வில்லை.

நாம் பரிசீலிக்க வேண்டிய வேறு ஒரு கருத்தும் இங்குள்ளது: காலியான கல்லறை மற்றும் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை முதலில் பார்த்தவர்கள் பெண்களாக இருந்தார்கள். இது நமது நாட்களில் திடுக்கிடச் செய்வதாக இல்லை; ஆனால் முதல் நூற்றாண்டு யூத சமயத்தில் அது சாட்சிகளே இல்லாதிருந்தது போல இருந்திருக்கும். பெண்கள் நீதி மன்றத்தில் சாட்சி கொடுக்கவில்லை மற்றும் அவர்கள் பொதுவாக நம்ப இயலாத சாட்சிகளாக கருதப்பட்டனர். புதிய ஏற்பாடு இயேசுவின் உயிர்த்தெழுதலை குறிப்பிடும் போது, இதை பிரதிபலிக்கிறது. பெண்கள் தாங்கள் கண்டதை சீஷர்களிடத்தில் சென்று கூறியபோது, "இவர்களுடைய வார்த்தைகள் அவர்களுக்கு வீண் பேச்சாக தோன்றியதினால், அவர்கள் இவர்களை நம்பவில்லை" என லூக்கா தெளிவாக கூறுகிறார் (லூக்கா 24:11). மேலும், இயேசுவின் ஆண் பின்பற்றாளர்களும் நம்புவதில் மந்தமாயிருந்தார்கள் என சுவிசேஷங்கள் மறைமுகமாக கூறுகின்றன. மத்தேயு 28:17, சீஷர்கள் இயேசுவை அவர் குறிப்பிட்ட கலிலேயா மலையின் மேல் சந்தித்த போது, "அவர்கள் பணிந்து கொண்டார்கள்; சிலரோ சந்தேகப்பட்டார்கள்" என கூறுகிறது. தோமா, இயேசு உயிர்தெழுந்திருந்தார் மற்றும் மற்ற சீஷர்களுக்கு தரிசனமாயிருந்தார் என்பதை கேள்விப்பட்டபோது, அவருடைய கைகளில் ஆணிகளினாலுண்டான காயத்தை நான் கண்டு, அந்த காயத்திலே என் விரலையிட்டு, "என் கையை அவருடைய விலாவிலே போட்டாலொழிய விசுவாசிக்கமாட்டேன்" என்று

*கூறினான் (யோவான் 20:25). இயேசுவின் உயிர்த்தெழுதலை குறித்து விரும்பும் எழுத்தாளர்கள், இயேசுவுக்கு மிகவும் நெருக்கமாயிருந்தவர்கள் கூட, அவரை முதலாவது விசுவாசிக்கவில்லை என கூறுவது எவ்வளவு விந்தையாக இருக்கிறது! உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை முதலாவது கண்ட சாட்சிகள் கூட சாட்சிகளாக இருக்கத் தகுதிப்படுத்தப்படவில்லை என்பது என்ன ஒரு விநோதமாக இருக்கிறது! அது நம்பவைக்கக் கூடிய கதை சொல்லுதலாக இல்லை! மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் ஆகியோர் அவர்களுக்கு தெரிந்திருந்தாலொழிய - அல்லது குறைந்தபட்சம் அவைகள் உண்மையானவைகள் என - நம்பியிருந்தாலொழிய, இப்படிப்பட்ட தர்மசங்கடத்தை ஏற்படுத்தும் விபரங்களை சேர்ப்பதை தவிர்த்திருப்பார்கள் என்று ஒருவர் எண்ணக்கூடும்.*

### *உயிர்த்தெழுதலுக்கு பிந்திய தரிசனங்கள்*

*ஐந்தாவதாக, உயிர்த்தெழுதலுக்கு பிந்திய தரிசனங்கள் நமக்கு கூறப்படுகின்றன. பவுல், "பிரதானமானவைகளை" கொரிந்து சபைக்கு கூறிய போது, அவர் இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலுடன், அவர் உயிர்த்தெழுந்த பின்னர் தம்முடைய சீஷர்களுக்கு பலமுறை தரிசனமானார் என்பதையும் இணைத்து கூறினார் (1 கொரிந்தியர் 15:5-8; மேலும் நடபடிகள் 1:3, நாற்பது நாளளவும் தரிசனமானார் என கூறுவதை கவனியுங்கள்). இந்த தரிசனங்கள் பதினொரு சீஷர்களுக்கு மட்டுமல்ல, ஆனால் "அவர் ஐந்நூறு பேருக்கு அதிகமான சகோதரருக்கு ஒரே வேளையில் தரிசனமானார்" (1 கொரிந்தியர் 15:6), யாக்கோபு (அனேகமாக இயேசுவின் சொந்த சகோதரர்) மற்றும் இறுதியாக பவுலுக்கும் தரிசனமானார். சில, ஆனால் எல்லா தரிசனங்களும் அல்ல, நான்கு சுவிசேஷங்களிலும் பதிவு செய்யப்படவில்லை. மற்றவைகள் பவுல் மனமாறி குணப்பட்டது மற்றும் அவர் அப்போஸ்தலராகும்படி அழைக்கப்பட்டது, நடபடிகள் 9; 22; 26 ஆகிய அதிகாரங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளன.*

*இயேசுவின் சொந்த பின்பற்றாளர்கள் விசுவாசிப்பதில் தாமதமாயிருந்தார்கள். உயிர்த்தெழுதலுக்கு பிந்திய தரிசனங்கள், இயேசுவின் சொந்த அப்போஸ்தலர்களை இயேசு தாம் உண்மையில் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்று நம்ப செய்வதற்கு அவசியமாயிருந்தது மற்றும் உயிர்த்தெழுதலுக்கான கண்கண்ட சாட்சிகளாக அவர்களை தகுதிப்படுத்தவும் அவசியமாயிருந்தது. பின்நாளில் இது அவர்களுடைய பிரதான பணியாக இருந்தது. பல்வேறு வகை மக்களுக்கு, பல முறை நிகழ்ந்த தரிசனங்கள் என்ற உண்மை மற்றும் பவுல் நடைமுறையில் சில சாட்சிகளிடம் விசாரித்தறிந்தார் என்ற உண்மை ஆகியவை அவைகளின் வரலாற்று ரீதியான தன்மையை உணர்த்துகிறது.*

### *மனமாறி குணப்படுதல்கள்*

*இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு ஆதாரமாக சவுல் மற்றும் யாக்கோபு ஆகியோரின் மனமாறி குணப்பட்ட சம்பவங்களும் சேர்க்கப்படுகின்றன. பின்நாளில் அப்போஸ்தலர் பவுல் என்று அறியப்பட்ட தர்சுபட்டணத்தானாகிய சவுலை விட, இயேசுவின் தெய்வீக அடையாளம் மற்றும் உயிர்த்தெழுதலை குறித்து சந்தேகப்பட்டவர் ஒருவருமில்லை. அவர் கிறிஸ்தவ இயக்கத்தை*

*துன்பப்படுத்துகிறவராக இருந்தார் (காணவும் நடபடிகள் 9; 22; 26; கலாத்தியர் 1:13, 14; 1 தீமோத்தேயு 1:12-15). நடபடிகள் புத்தகம் இவரை கிறிஸ்தவத்தின் பிரதான எதிரியாக காண்பிக்கிறது மற்றும் அவர் மனமாறி குணப்பட்டபின், சபை ஒரு சமாதானகாலத்தை அனுபவித்ததாக காண்பிக்கிறது (9:31). அதே போல், இயேசு "யாக்கோபிற்கு" தரிசனமானதாக பவுல் கூறுகிறார் (1 கொரிந்தியர் 15:7). இதற்கு முன், "பன்னிருவருக்கும்" அவர் தரிசனமானதாக கூறுவது (வசனம் 5) மற்றும் "அப்போஸ்தலரெல்லாருக்கும்" தரிசனமானார் என்று கூறுவதிலிருந்து (வசனம் 7) யாக்கோபு என்பவர் ஒரு அப்போஸ்தலனாக இருக்கவில்லை என்பதை காண்பிக்கிறது. இந்த யாக்கோபு யாராக இருக்கக் கூடும் மற்றும் பவுல் ஏன் இந்த தரிசனத்தை மிகவும் முக்கியமானதாக கருதுகிறார்?*

*இவர் இயேசுவின் சகோதரராயிருந்தார் என்பது தான் மிகவும் சாத்தியமான விளக்கமாக இருக்கிறது, இவர் ஆரம்பகால சபையின் ஒரு தலைமை பொருப்பாளராக மாறினார் மற்றும் யாக்கோபு நிருபத்தையும் எழுதினார். பவுலைப் போல, யாக்கோபு இந்த தரிசனத்தின் விளைவாக ஒரு விசுவாசியாக மாறினார். மாற்கு 3:21, ஒரு சந்தர்ப்பத்தில் அவருடைய குடும்பத்தார், "அவர் மதிமயங்கியிருக்கிறார்" என்று சொல்லி அவரை "பிடித்துக் கொள்ளும்படி வந்தார்கள்" என்று கூறுகிறது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், இயேசுவின் சொந்த ஊர் மக்கள் அவருடைய வார்த்தைகள் மற்றும் செயல்கள் புத்தி சுவானமற்றவைகளாக இருந்தன என்று நினைத்தார்கள் மற்றும் அவருடைய குடும்பத்தார் அவரை பிடித்துக் கொள்ளும்படி வந்தார்கள். கூட்டத்தார் இயேசுவை நோக்கி, "உம்முடைய தாயும் உம்முடைய சகோதரரும் உம்மை பார்க்கும்படி வெளியே நிற்கிறார்கள்" என்று அறிவித்தபோது, அவர் பிரதியுத்தரமாக, "... தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ அவனே எனக்குச் சகோதரனும், எனக்குச் சகோதரியும், எனக்கு தாயுமாய் இருக்கிறான்" என்று ஏன் சொன்னார் என்பதை இது சந்தேகமின்றி விளக்குகிறது (மாற்கு 3:31-35). யோவான் 7:5, "அவருடைய சகோதரரும் அவரை விசுவாசிக்கவில்லை" என்று கூறுகிறது; இருப்பினும் நடபடிகள் 1:14, இயேசுவின் உயிர்த்தெழுதல் மற்றும் பரிமேறி சென்றதை தொடர்ந்து எஞ்சிய பதினொரு அப்போஸ்தலர்கள், "அங்கே இவர்களெல்லாரும், ஸ்திரீகளோடும் இயேசுவின் தாயாகிய மரியாளோடும், அவருடைய சகோதரரோடுங்கூட (வலியுறுத்தல் என்னுடையது) ஒருமனப்பட்டு, ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள்" என்று கூறுகிறது. சிலுவையில் அறையப்படுதல் மற்றும் நடபடிகள் அதிகாரம் 1 ஆகிய இவற்றிற்கு இடைப்பட்ட ஏதோ ஒரு காலகட்டத்தில் யாக்கோபு விசுவாசியாகியிருந்தார். பவுலைப் போல உயிர்த்தெழுதலுக்குப்பின் நடந்த தரிசனம் ஒன்றினால் யாக்கோபின் விஷயமும் கூட நிகழ்ந்திருக்கும் மற்றும் வேறு எந்த விளக்கத்தைக் காட்டிலும் இந்த விளக்கம் திருப்திகரமானதாக இருக்கும், ஏனெனில், ஆரம்பகாலத்தில் இருவரும் பிடிவாதமாக நம்ப மறுத்து வந்தார்கள்.*

### தியாக அர்ப்பணிப்பு விசுவாசம்

*சீஷர்கள் உயிர்த்தெழுதலை அறிவிப்பதற்காக மரிக்கவும் மனதாயிருந்தார்கள். ஆரம்பகால கிறிஸ்தவ பாரம்பரியங்களின்படி, இயேசுவின் முதல் அப்போஸ்தலர்கள் (யோவான் மற்றும் யூதாஸ் நீங்கலாக) எல்லாரும்*

இயேசு சிலுவையில் அறையப்பட்டிருந்தார் மற்றும் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்திருந்தார் என சாட்சி கொடுத்ததற்காக இரத்த சாட்சிகளாக கொல்லப்பட்டார்கள். மோசடி/புரட்டு என்று அவர்களுக்கு தெரிந்திருந்த ஒரு காரியத்திற்காக அவர்கள் எப்படி மரிக்கவும் மனதாயிருந்தார்கள் என்பதை விளக்குவது மிகவும் கடினமானதாக இருக்கும். நிச்சயமாக, அவர்களில் ஒருவராவது பெலவீனமடைந்து, முழு கதையும் ஒரு மோசடி என்பதை வெளிக்காட்டியிருப்பான். அவர்களில் ஒருவராவது அப்படி செய்ததற்கான வரலாற்று ஆதாரம் எதுவுமில்லை.

***சபை***

ஆரம்பகால சபையானது, இயேசுவின் மரணத்தை தொடர்ந்து, உடனே உருவாகி, விரைவாக பரவியது என்று வரலாற்று அடிப்படைகளை ஒருவரும் மறுக்க இயலாது. சபையானது இன்று வரை தொடர்ந்து கொண்டிருக்கிறது. இயேசுவின் ஆரம்ப கால சீஷர்கள் அடிக்கடி உபத்திரவம் மற்றும் மரணத்திற்கும் கூட உட்படுத்தப்பட்ட இந்த வரலாற்று ரீதியான அதிசய சம்பவத்திற்கான காரணம் விளக்கப்பட வேண்டும். பல இயக்கங்கள் உபத்திரவத்தின் கீழ் தோன்றி வளர்ந்திருக்கின்றன. கிறிஸ்தவத்தை தனித்தன்மையுள்ளதாக மாற்றுவது யாதெனில், அது திடீரென காட்சியில் வந்த விதம் மற்றும் அது வளர்ந்த வேகம், இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து விட்டார் மற்றும் அவரை பின்பற்றுகிறவர்களுக்கு அவர் நித்திய ஜீவனை அளிக்கிறார் என்ற ஆழமான விசுவாசம் இந்த அற்புத நிகழ்வை விளக்கக் கூடியதாக இருக்கிறது. வேறு எதுவும் இதற்கு காரணமாயிருக்கும் என்பதை கற்பனை செய்வது கடினமானது. ஜேம்ஸ் டி. ஜி. டண் என்பவர் கிறிஸ்தவ இயக்கம் இயேசு தமது முதல் சீஷர்களிடத்தில் ஏற்படுத்திய தாக்கத்திலிருந்து மட்டும் போதுமான அளவு விளக்கப்பட முடியும் மற்றும் அவர்கள் மேல் அவர் ஏற்படுத்தின தாக்கத்தின் விளைவே சுவிசேஷங்களாக இருக்கின்றன என்று அவர் கூறினார். "கிறிஸ்தவம் வரலாற்று ரீதியானது என்பது, நசரேனாகிய இயேசு வரலாற்று ரீதியானவர் என்ற உண்மை மற்றும் அவர் விட்டுச் சென்ற தாக்கம் ஆகியவை இல்லாமல் விளக்குவது என்பது இயலாததாக இருக்கிறது."[5] அந்த "தாக்கம்" என்பது புதிய ஏற்பாட்டில் அவருடைய உயிர்த்தெழுதல் தொடர்பான பதிவுகளின் விளைவாக இருந்தது. பென் வெதரிங்டன் III என்பவர் இந்த முடிவை ஆமோதிக்கிறார்:

> ... சிலுவையில் அறையப்படுதலுக்கு பிறகு, சபையை உருவாக்குவதற்கு ஒரு அற்புதம் தேவைப்பட்டது. உண்மையில், இயேசுவின் உள்வட்ட சீஷர்களை உருவாக்குவதற்கு தேவைப்பட்டது. நம்முடைய ஆரம்பகால மூலங்கள், அவர்களுடைய சொந்த அறிக்கையினால், அவருடைய உள்வட்ட ஆண் சீஷர்கள் பெரும்பாலானவர்கள், இயேசுவை மறுதலித்தார்கள், விட்டுவிலகினார்கள் அல்லது காட்டிக்கொடுத்தார்கள் என்பதில் தெளிவாய் உள்ளனர், ஆனால் ஸ்திரீகள் அவர் மரித்ததையே பார்த்தார்கள் மற்றும் கல்லறையின்மேல் இருக்கும்படி மலர்வளையம் வைக்க சென்றார்கள். அவருடைய உயிர்த்தெழுதல் என்ற வரலாற்று நிகழ்வுதான் இந்த பலமான போக்கை தலைகீழாக மாற்றியது, அது இல்லாதிருந்தால், இயேசுவின் கதை வரலாற்றின் குப்பைதொட்டியில்

விடப்பட்டிருக்கும்.[6]

## அவர் இப்போதும் உயிரோடிருக்கிறாரா?

இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் மற்றும் இப்போது உயிரோடிருக்கிறார், பரலோகத்திலுள்ள தமது பிதாவின் வலது பாரிசத்தில் இருக்கிறார் (காணவும் மாற்கு 16:19) இது கிறிஸ்தவ விசுவாசத்திற்கு ஒரு திறவு கோலாக உள்ளது. பவுல், பின்வருமாறு எழுதினார்,

> கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார், மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள் ... எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப்போடும் வரைக்கும், அவர் ஆளுகை செய்யவேண்டியது. பரிகரிக்கப்படுங் கடைசிச் சத்துரு மரணம் (1 கொரிந்தியர் 15:20-26).

இயேசுவானவர் நித்தியமாக வாழ்வது, விசுவாசிகளின் முடிவான நித்திய வாழ்வுக்கான நம்பிக்கையை தருகிறது, அப்போது மரணமும் கூட ஒரு பிரச்சனை என்ற நிலையில் இருந்து முடிந்து போயிருக்கும்.

அதே போல் எபிரெயர் 7:23-25, இயேசுவே "பிரதான ஆசாரியர்," மோசேயின் கீழ் பணியாற்றிய ஆசாரியர்களுக்கும் மேலானவர் என விவாதித்த பிறகு, இயேசு, "எப்பொழுதும் உயிரோடிருக்கிறார்" மற்றும் "தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்கிறார்" என்பதை உறுதியாக கூறுகிறது. விசுவாசிகள் இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலில், அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறார் மற்றும் அவர் தங்களுக்கு உதவி செய்யக்கூடியவராக இருக்கிறார் என்ற ஒரு பெரிய ஆறுதலை கண்டடைகிறார்கள். அவர் தம்மை பின்பற்றுகிறவர்களுக்காக பிதாவிடம் ஆவிக்குரிய வேண்டுதல் செய்கிறார்.

இயேசு உண்மையில் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தாரா இல்லையா என்பது ஒரு முக்கியமான கேள்வியாக உள்ளது. சான்றுகளை உற்று நோக்குங்கள், மற்றும் அதின் பின்னர் நீங்கள் முடிவெடுங்கள்.

---

குறிப்புகள்

[1]இந்த கருத்துக்கள் கேரி எல் கேபர்மாஸ் என்பவரின் "இயேசுவின் அற்புதங்கள் உண்மையில் நிகழ்ந்தன என்று நான் ஏன் விசுவாசிக்கிறேன்," என்ற நூலில் விவாதிக்கப்படுகின்றன. N. L. Geisler and P. K. Hoffman, eds., *Why I Am a Christian: Leading Thinkers Explain Why They Believe,* rev. and exp. ed. (Grand Rapids, Mich.: Baker Books, 2006), 126-34. [2]"ஆரம்ப கால கிறிஸ்தவத்தின் வடிவமைப்பு நமக்கு தெரிந்தி ருப்பதில்லை - சில வடிவமைப்புகள் வெளிப்படையான சில வித்வான்களால் கண்டு பிடிக்கப்பட்டிருந்தாலும் - அவைகள் இயேசுவின் அவமானமான மரணத்திற்கு பின்பு தேவன் அவரை வாழ்வுக்கு மீண்டும் எழுப்பினார் என்பதை உறுதிபடுத்துவதில்லை. (N. T. Wright, *The Challenge of Jesus: Rediscovering Who Jesus Was and Is* [Downers Grove, Ill.:

InterVarsity Press, 1999], 126). [3]ஜான் டொமினிக் குரோசன் *Jesus, A Revolutionary Biography* (San Francisco: HarperSanFrancisco, 1995), 154. [4]ஜான் டொமினிக் குரோசன், *The Historical Jesus: The Life of a Mediterranean Jewish Peasant* (San Francisco: HarperSanFrancisco, 1991), 393. [5]ஜேம்ஸ் டி. ஜி. டண், *A New Perspective on Jesus: What the Quest for the Historical Jesus Missed* (Grand Rapids, Mich.: Baker Academic, 2005), 22-23. [6]Ben Witherington III, *What Have They Done with Jesus? Beyond Strange Theories and Bad History - Why We Can Trust the Bible* (San Francisco: HarperSanFrancisco, 2006), 11.